# அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று மதிப்பீட்டில; A+ (CGPA:3.64) தகுதி பெற்றது)

**காரைக்குடி – 630 003**

---

நாள் : 28.11.2018

இந்திய பல்கலைக்கழக கூட்டமைப்பு சார்பாக தென் மண்டல பல்கலைக்கழகங்களுக்கிடையே மகளிருக்கான ஹாக்கிப் போட்டிகளின் துவக்க விழா இன்று (28.11.2018) காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.



இப்போட்டிகள் இன்று துவங்கி 2.12.2018 வரை நடைபெறும். தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகம், கேரளா மற்றும் புதுச்சேரி மாநிலங்களைச் சேர்ந்த பல்கலைக்கழகங்களிலிருந்து மொத்தம் 34 அணிகள் விளையாட உள்ளன. 612 வீராங்கனைகள் விளையாட இருக்கிறார்கள்.

இதன் தொடக்க விழாவில் அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா.நா.இராஜேந்திரன் அவர்கள் உரை நிகழ்த்துகையில், அழகப்பா பல்கலைக்கழகம் தேசீய அளவில் மட்டுமின்றி ஆசிய அளவிலும் உயர்கல்வியில் குறிப்பிடத்தக்க சாதனைகளை அடைந்துள்ளது. ஒரு கல்வி நிறுவனத்தினுடைய கண்களாக கருதப்படுவது கல்வியும், உடற்கல்வியும் ஆகும். எந்த ஒரு கல்வி நிறுவனமும் சிறப்பு பெறுவதற்கு கல்வியோடு விளையாட்டுகளிலும் சாதனை புரிய வேண்டும் என்றார். கல்வி என்பது ஒரு பரிமாணத்தை கொண்டதுமட்டுமில்லை, பல்வேறு பரிமாணங்கள் சேர்ந்ததேயாகும். அதனால் கல்விக்கும், உடற்கல்விக்கும் சமமான முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றார்.

விளையாட்டுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் ரூசா இரண்டாம் கட்ட நிதியிலிருந்து ரூ.2.5 கோடி மதிப்பீட்டில் நவீன உள்விளையாட்டு அரங்கம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் விரைவில் கட்டப்பட உள்ளது என்றும் தெரிவித்தார். ஆட்சிக்குழு உறுப்பினர் முனைவர் த.ரா.குருமூர்த்தி வாழ்த்துரை வழங்கினார். அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரி முதல்வர் முனைவர் எம்.சுந்தர் அனைவரையும் வரவேற்றார். பல்கலைக்கழக விளையாட்டு இயக்குனர் முனைவர் எம்.செந்தில்குமரன் போட்டிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார். உடற்கல்வியியல் கல்லூரி உதவி பேராசிரியர் முனைவர் வைரவசுந்தரம் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

இன்று நடைபெற்ற தொடக்க ஆட்டத்தில் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக அணியும், கேரளா பல்கலைக்கழக அணியும் மோதின. அதில் கேரளா பல்கலைக்கழக அணி 4 – 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பின்னர் விளையாடிய அணிகளின் விவரம்:

விசாகப்பட்டிணம் ஆந்திரா பல்கலைக்கழக அணி (4 – 2) என்ற கோல் கணக்கில் தமிழ்நாடு விளையாட்டு பல்கலைக்கழக அணியை வென்றது. சென்னை பல்கலைக்கழக அணி (4 - 1) என்ற கோல் கணக்கில் தார்வாட் கர்நாடக பல்கலைக்கழக அணியை வென்றது. சென்னை அண்ணா பல்கலைக்கழக அணி (2 – 0) என்ற கோல் கணக்கில் கேரளா கண்ணூர் பல்கலைக்கழக அணியை வென்றது.

பேரா.ஹா.குருமல்லேஷ் பிரபு

பதிவாளர்